IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
R.L.T.O.P.No.6/2024
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.40 p.m.

<u>எ.ம.சா. 1 சாட்சி இராஜாராம்   த.பெ.மாடசாமி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 26.03.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுச்சொத்தில் நான் எந்த வருடம் வாடகைக்கு சென்றேன் என்றால் 2016 ம் வருடம் நவம்பர் மாதத்தில் வாடகைக்கு சென்றேன். யாரிடம் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் மனுதாரரின் தந்தை இமயபதியிடம் ஏற்படுத்தினேன்.

2. கடந்த 2016 நவம்பரிலிருந்து தற்போது வரை வாடகைதாரராக குடியிருந்து வருகிறேன். எத்தனை வருடத்திற்கு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் 2 வருடம் ஆகும். 2ஆண்டுகளுக்கு பிறகு தாவாக் கட்டிடத்திற்கு வாடகை ஒப்பந்தம் மேற்கொண்டேனா என்றால் மனுதாரரின் தந்தை தேவையில்லை என்று கூறிவிட்டார். வாடகை ஒப்பந்த இரசீது எனக்கு வழங்கப்படுமா என்றால் 2022ம் ஆண்டுவரை வாடகை இரசீது பெற்றுக்கொண்டேன் அதன்பிறகு வாடகை இரசீது வழங்கப்படவில்லை.

3. 25.10.2023ல் எனக்கு மனுதாரர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரியாக தெரியாது. மேற்படி அறிவிப்பில் 2021ம் வருடம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதத்திற்கான வாடகை செலுத்தவில்லை என்றும் அதனை செலுத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார் என்றால் சரியல்ல. கடந்த 9 ஆண்டுகளில் 2மாதம் மட்டும்தான் கொரோனா காலக்கட்டத்தில் செலுத்தவில்லை. மேலும், மனுதாரரின் தந்தைதான் செலுத்த வேண்டாம் என்று கூறினார்.

4. மனுதாரர் பாக்கி தொகையை கேட்டு கடிதம் அனுப்பியபோது நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் தொலைபேசி மூலம் மனுதாரருக்கு அனுப்பினேன். மேற்படி நான் தொலைபேசியில் அனுப்பிய குறுஞ்செய்தியை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி குறுஞ்செய்தி எதுவும் அனுப்பாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. கடந்த 2022ம் வருடம் வரை மனுதாரரின் தந்தை இமயபதியிடம் வாடகை செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2022க்கு பிறகு செண்பகவேல் என்பவரிடம் ஏன் வாடகை செலுத்தினேன் என்றால் வாடகை தொகை 5000/- கூடுதலாக வந்ததால் அதனால் மனுதாரரின் வங்கி கணக்கிற்கு வாடகை தொகையை செலுத்தினேன்.

6. வழக்குக் கட்டிடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இம்மனுவை தாக்கல் செய்த பிறகும் எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. எழுத்துப்பூர்வமான ஆவணம் எனக்கும், மனுதாரருக்கும் இடையே இல்லாததால் தாவாக் கட்டிடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான்

உரிய காலஅவகாசம் கொடுத்தால் தாவாக் கட்டிடத்தை விட்டு வெளியேறிவிடுவேன். எவ்வளவு கால அவகாசம் வேண்டும் என்றால் 2–3 ஆண்டுகள் ஆகும்.

7. தாவாக்கட்டிடத்திற்கு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தாததால் தாவாக்கட்டிடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கூறினார் என்றால் இமயபதிதான் கூறினார், மனுதாரர் கூறவில்லை. 2018ம் வருடம் தாவாக் கட்டிடத்தை இமயபதி அவருடைய மகனுக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் எழுத்துப்பூர்வமான ஆவணம் ஏற்படுவதற்கு முன்வராததால்தான் மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. மேற்படி 2மாதவாடகை செலுத்தாத காரணத்திற்காகவும், எழுத்துப்பூர்வ வாடகை ஒப்பந்தம் இல்லாத காரணத்தினாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:4.00p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.26 17:40:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.